OS No.19/2018 நாள்: 05.07.2019

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர், திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகன் | சாதி | : -- |
| தந்தை பெயர் | : மார்கண்டன் | நாட்டினம் | : இந்து |
| கிராமம் | :பனங்காட்டுகொல்லை | வேலை | : விவசாயம் |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | வயது | : 35 |

வா.சா.1 ___ முருகன் ஆஜர் முதன்மை விசாரணை :-

நான் இவ்வழக்கில் வாதி. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். 15.08.2002ம் தேதியில் என் தாயார் தாதம்மாள் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.1** ஆகும். 26.09.2016ம் தேதியில் 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 26.09.2016ம் தேதியில் 1,3 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 26.09.2016ம் தேதியில் 1, 3 பிரதிவாதிகள் இறந்த சேகருக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 08.03.2018ம் தேதியில் மாணிக்கம் பெயரிலுள்ள கணினி சிட்டா (பட்டா எண்.708) **வா.சா.ஆ.5** ஆகும். 08.03.2018ம் தேதியிட்ட சேகர் பெயரிலுள்ள கணினி சிட்டா (பட்டா

எண்.1796) **வா.சா.ஆ.6** ஆகும். 08.03.2018ம் தேதியிட்ட செல்வம் பெயரிலுள்ள கணினி சிட்டா (பட்டா எண்.1797) **வா.சா.ஆ.7** ஆகும். 08.03.2018ம் தேதியிட்ட சேகர்,செல்வம், தர்மராசன் ஆகியோர் பெயரிலுள்ள கணினி சிட்டா (பட்டா எண்.1798) **வா.சா.ஆ.8** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.